## முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
## L.A.O.P. No. 15/2021

**கோ.சா.1 / திருமதி. சித்ராதேவி / 25.06.2024**

**எதிர்கோரிக்கையாளர் தரப்பு குறுக்கு விசாரணை**

மனுச்சொத்து எனக்கு சொந்தமானது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் கடந்த 2004 ஆம் ஆண்டு எனது அம்மா என் பெயருக்கு தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததை தாக்கல் செய்துள்ளேன். அவ்வாறு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட எனது இடத்திற்கு அரசாங்க வழிகாட்டு மதிப்பு சதுர அடிக்கு ரூ.197.70 ஆக நிர்ணயிக்கப்பட்டு நான் பெற்றுக்கொண்டேன் என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட எனது இடத்திற்கு அருகில் உள்ள க.ச.எண்.587/1 இடத்திற்கு சதுர அடிக்கு ரூ.2155/– வழங்கப்பட்டுள்ளது. கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கு மதிப்பு வழிகாட்டு மதிப்பின் அடிப்படையில் தான் நிர்ணயம் செய்கிறார்கள் என்ற விவரம் தெரியும் என்றால் சரிதான். கையகப்படுத்தப்பட்ட எனது நிலத்திற்கு வழிகாட்டு மதிப்பு எவ்வளவு என்பதற்கு ஆவணம் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. அதேபோல் எனது நிலத்திற்கு பக்கத்து நிலத்திற்கு அதிகமாக பணம் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை காண்பிப்பப்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் இல்லை. நிலம் எனக்கு சொந்தமானது என்பதற்கு ஆவணமும், வழிகாட்டி மதிப்பு ஆவணமும் வழக்கில் தாக்கல் செய்யப்படவில்லை என்பதால் வழிகாட்டி மதிப்பு அடிப்படையில் தான் உரிய இழப்பீடு எனக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் ஆகவே, நான் கோரும் நிவாரணம் வழங்க முடியாது என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

N GUNASEKARAN

Digitally signed by N GUNASEKARAN
Date: 2024.06.25 19:01:00 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.